இந்து இந்தி எதிர்ப்பு செய்யுமா?

விலை அரை அணா 4 பக்கம் Regd. No. M. 5458
Phone No. 4502

... அறிவாலயம்
25/8, திருவள்ளுவர் குடியிருப்பு,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை-600 078.

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (4—9—49) வெளியூர் (5—9—49) [இதழ் 26

இதோபதேசம் போதாது -பலிக்காது!

தவி, தாதியானுள்! தேம்பிப் பலன் இல்லை!

வெற்றிக்கு வழி—நேர்மை

இந்தி எதிர்ப்பு-வீண கூச்ச ...ாக, வீம்பாக, சண்டித்தன ...ாக, காங்கிரசை ஆதிரிக்கும் ...இந்து' இதழுக்குத் தென் ...ட்டது. இன்று, 'இந்து' தன் ...னதிலிருப்பதை, ஒளிவு ...றைவு இன்றிக் கூறக் கூடு ...ஞல், இந்தி எதிர்ப்பு ...குவை என்று நிச்சயமாக ...றிவிக்கும்.

...ந்த அளவுக்கு, 'இந்து' ...ன் மனதிலே, மருட்சியும் ...ரிச்சலும் ஏற்பட்டிருக்கிறது. ...இந்தி மொழி ஏகாதிபதய ...ழுதிகள் மேற் கொண்டுள்ள ...றைகளும், அந்த முறைகளை ...வர்கள் வலியுறுத்தும் ...பாது காட்டும் பிடிவாதமும், ...இந்து' இதழுக்கு மனவேதனை ...ய உண்டாக்குகின்றன. ஆக ...வதான், இப்போது, அடிக் ...டி, 'இந்து' இதழில், இந்தி ...மாழியைத் திணிக்கும்போக் ...கைக் கண்டிக்கும் குறிப்பு ...களும், கடிதங்களும், கட்டுரை ...களும், வெளியிடப்படுகின் ...றன.

இந்தி எதிர்ப்பு இயக்கம் ...டத்துபவர்கள், வேறு துறை ...ளிலே, தனக்கு வேண்டாத ...ர்கள் என்ற காரணத்துக் ...ாக, அந்த இயக்கத்தைக் ...கலி செய்தும், கண்டித்தும், ...ழித்துக்கட்டுவதை ஏதோ ...ர் 'தேசிய கைங்கரியமாக'க் ...கருதி நின்று 'இந்து' இதழ்.

இந்தி எதிர்ப்பு இயக்கம், நமது மாகாண மக்களின் பொது இயக்கம், மொழித் துறையிலே எதேச்சாதிகாரம் கூடாது என்பதை எடுத்துச் காட்டும் முயற்சி, கல்வித் துறையிலே கண்மூடித் தனமான போக்கு கூடாது என்பதை விளக்கும் போக்கு, என்று வட நாடு உணரும்படிச் • செய்திருந்தால், இன்று 'இந்து', அப்பம் பறி கொடுத்தப் பூனை போலாகி இருக்க வேண்டி வந்திராது. இப்போதுதான் 'இந்து'வுக்கு, இந்தி மொழியைத் திணிக்க விரும்புபவர்கள், எவ்வளவு எதேச்சாதிகாரமாக நடந்துகொள்கின்றனர், என்பது விளங்குகிறது.

இனி இது மேலும் மேலும் தெளிவாக, இன்னும் அதிக மன வேதனை தரக்கூடிய ...த்தில், இந்துவுக்கும் மற்ற பல இதழ்களுக்கும் தெரி...தான் போகிறது. இந்தி ...ர்ப்பு இயக்கத்தை இவர் ...ளெல்லாம் கூடிக் கொண்டு, ...லைத்ததன் விளைவு, நமது ...காணத்துக்கு எவ்வளவு ...ரிய கேடானது என்பதை ...ர் உணரத்தான் போகிறா...ர்கள்.

...இந்தி [illegible] திணிப்பதைக் [illegible] ...

கண்டித்து, இரண்டு கிழமைகளுக்கு முன்பு, ஆசிரியருக்குக் கடிதம் என்ற வகையில் ஓர் கட்டுரையை 'இந்து' வெளியிட்டது.

'இந்து' இதழின் மனப்பான்மை எப்படி இருக்கிறது என்பதை 'ஜாடை'யாக, இதன மூலம், தெரிவித்ததுடன் நிற்கவில்லை. ஆகஸ்ட்டு 29-ந் தேதி 'நாராயணு' என்பவரின் பெயரில் 'இந்து'வில் வெளிவந்துள்ள கட்டுரையில், 'இந்து'வின் மனதிலே என்னென்ன கருத்துகள் அலைமோதிக்கொண்டுள்ளன என்பது, மேலும் நன்ருகப் புலனாகிறது.

இந்தி மொழியைத் திணிப்பவர்களின் நோக்கத்தையும் முறையையும் கண்டிக்கும் இக்கட்டுரையில், அவர்கள், 'ஹிட்லர்' முறையைக் கையாளுகின்றனர், என்றே, குறிப்பிடப்பட்டிருக்கிறது. எதிர்ப்பை அழிப்பது - அழிப்பதற்கு எத்தகைய நியாயமற்ற முறையையும் அக்ரமத்தையும் கையாள்வது, சிறுபான்மையோரின் கருத்தைப் பெரும்பாலோரின் மீது திணித்து அவர்களின் உரிமையை அழிப்பது, என்பவைகள் தாம், ஹிட்லர் முறை.

இந்த முறையை, இந்தியை ஆதரிப்பவர்கள் கையாளுகிருர்கள் என்று 'இந்து' இதழில் வெளிவந்த கட்டுரை குறிப்பிடுகிறது.

நிலைமை எவ்வளவு மோசமாக இருந்தால், இந்தியைப் புகுத்துபவர்கள் எவ்வளவு ஆணவத்தோடு இருக்கிருர்களென்ருல், 'இந்து' இதழில், ஹிட்லர் முறையை, இந்த ஆதரவாளர்கள் கையாளுகிருர்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கும்!

இந்தி சாகித்ய சம்மேளனத்தின் போக்கு, எதேச்சாதிகாரம் வாய்ந்ததாக இருக்கிறதாம். ஏன் இராது? நேற்று முளைத்த ஒரு மொழி, தொன்மையான வேறு பல மொழிகளை மூலையில் தள்ளிவிட்டு, ஒரு துணைக்கண்டத்தின் பொதுமொழி, ஆட்சி மொழி எனும் முடிதரிக்கும் நிலையைப் பெறுகிறது! ஏன், எக்களிப்பும் இறுமாப்பும் ஏற்படாது இந்தி சாகித்ய சம்மேளனத்துக்கு? 'இந்து' இந்தி மொழியைத் திணிப்போரின் போக்கைக் கண்டித்து என்ன பயன்? இந்தி எதிர்ப்புதான், 'இந்து'வுக்குப் பிடிக்காதே!!

இந்தி எதிர்ப்பை இழித்துப் பழித்தும் பேசாமல், மக்கள் மனதிலே உள்ள [illegible] ...

பாசீச வெறி கொண்டலையும் பிரசாத்!

அரசியல் ஆக்க மன்றத்தின் பீகார் பிரதிநிதியான தோழர் பிரஜேசுவரபிரசாத் என்பவர், "மாகாண சுயாட்சி"யோடு மும்முரமாகப் போர்தொடுத்தார். அகில உலக அரங்கில் போர் மேகங்கள் ஒன்று திரண்டுவிட்டிருக்கின்றன வென்றும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள இந்தியாவின் எதிரிகள் அத்துடன் ஐக்கியமாகிவிட்டார்களென்றும், தக்க எதிர் நடவடிக்கை உடனடியாக எடுத்துக்கொள்ளாவிட்டால் இந்தியாவிற்கு அழிவு சம்பவித்துவிடுமென்றும், அதற்குத் தடைக்கல்லாக இருப்பது 'மாகாண ஆட்சிதான்' என்றும், எனவே மாகாண ஆட்சியை கொலைசெய்து நீக்கிவிட வேண்டுவது முதல் முதலாகச் செய்யவேண்டிய முக்கியமான ஏற்பாடு என்றும், சொல்மாரிப்பொழிந்து, நாடகம் ஆடித்தீர்த்துவிட்டார். ஏகம்பாக உரிமை கொண்ட, பலம்பொருந்திய, எதேச்சாதிகார மத்திய அரசாங்கம் ஒன்றுதான் இந்தியாவின் தேவை என்று அவர் வாதம்—இல்லை-பிடிவாதம் செய்தார் பிரசாத். முதல்தரமான பாசீசப் போக்கு! வேறு எந்த நாட்டிலும் காணமுடியாதப் பிறவி!!

முக்தி மார்க்கம் காட்டும் சன்யாசி

போலிசார் தவச்சாலைக்கு அனுப்ப முயல்கின்றனர்

ஒரு கொலைவழக்கு சம்பந்தமாகக் கடந்த 18 மாதகாலமாகத் தேடப்படுபவன் ஏழுமலை என்பவன். ஆனுல் அவன் இதுவரை மக்களைப் பாபக் கடலிலிருந்து கரையேற்றி முக்திமார்க்கம் காட்டும் ஞானசிரியராக கடித்துச் சன்னியாசி வேடத்தில் திரிந்துகொண்டிருந்தான். பெங்களூர் போலீசார் அவனைக் கண்டுபிடித்துக் கைதுசெய்து, சென்னைப் [illegible] டெட்டவிக்குத் தவச [illegible] அனுப்பி வைக்க ஏற்பாடு [illegible] செய்தனர்.

ஆளுகின்ருர்!

(புதுவைச் சிவம்)

பற்ருக் குறை போக்க — உணவைப்
பங்கீடு செய்திடுவார்.
வற்றிய வாழ்வுநிலை — தனையே
மாற்றவோ எண்ணங்கொள்ளார்.
முற்றிலும் தாழ்ந்திருக்கும் — சமூகம்
முன்னேறத் தான் முயன்ருல்,
குற்றம் பல கூறி — அடக்கக்
கொடுங்கோல் துணை கொள்வார்.

உண்மைக குழைத்திடுவோம் — என்பார்
உற்ற குறை யறியார்.
கண்ணைக் கெடுத்துவிட்டே — உடலைக்
காத்திட எண்ணுகின்ருர்.
வண்மை மிகு வாழ்வை — மக்கள்
யாவரும் பெற்றிடவே
எண்ணம் சிறிது மிலார் — அவர்தாம்
இந்நாட்டை ஆளுகின்ருர்!

வல்லூறுகளுக்கு விருந்து!

வருந்தி அழைக்கிருர் பாட்நகர்

அமெரிக்கமுதலாளித்துவ வல்லூறுகளுக்கு விருந்தழைப்பு விடுகிறார் ஸர் பாட்நகர்.

ரஸாயனத் தயாரிப்புகள், பெரும் யந்திரங்கள், ரயில் இன்ஜின்கள், மின்சார சாமான்கள், விவசாயக் கருவிகள் முதலியன தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு அன்னிய முதலாளிகள் முதலீடு செய்வதை இந்தியா மிக மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது என்று, அமெரிக்கர்களிடம் ஆசைமொழி கூறி நிற்கிருர் ஸர் பாட்நகர்.

வெளிநாட்டு முதலாளிகளுக்கு எவ்வளவு சலுகைகள் காட்டவும் முடியுமோ அவ்வளவையும் காட்டி, எத்தகைய ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டுமோ அவ்வளவையும் நடத்தித் தரவும் இந்தியா தயாராக இருக்கிறது என்று அமெரிக்க முதலாளிகளுக்கு வரவேற்பு இதழ் வாசித்து நிற்கிருர் தோழர் ஸர். பாட்நகர்.

அவர் ஐ. நா. விஞ்ஞான மாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு இந்தியத் தூதுக்குழுவின் தலைவராகச் சென்றுள்ளார்.

தொழிற்சாலைகளின் தேய்மானச் செலவுக்காக, 28 சத வீதம் அனுமதிக்கப்படுவதாகவும், லாபங்களைத் தாராளமாகத் தங்கள் நாட்டுக்கு அனுப்ப முதலாளிகள் அனுமதிக்கப்படுவதாகவும், விசேஷ சலுகைகளாக, முதலாளிகள்முன் வைக்கப்படுகின்றன, இந்திய அரசாங்கப் பிரதிநிதியால்.

எவ்வளவு லாபம் கிடைத்தாலும், அதை எடுத்துக்கொண்டு போகலாமாம்! வல்லூறுகளுக்கு அழைப்பு விடுகிறார் முதலாளித்துவ எடுபிடி!

இங்கே முடங்கிக்கிடக்கும் முதல்களைமீட்டு, நாட்டின் நலத்திற்குச் செலவிட ஏன் இவர்களுக்கு இன்னமும் மனம் பிறக்கவில்லை? இந்திய முதலாளித்துவத்தோடு அமெரிக்க முதலாளித்துவத்தைப் பிணைத்து, பண அரசு நாட்டை அடக்கி ஆளும் நிலையை உண்டாக்கும் வழியிலேயேதான் இவர்கள் முயற்சி சென்று முடிகிறது.

அமெரிக்க முதலாளித்துவ வலையத்தில், இந்தியா சிக்க இருக்கிறது! ஆகவேதான் அமெரிக்க வல்லூறுகளுக்கு விருந்தழைப்பு விடுகிறார் ஸர் பாட்நகர்.

விசாகை கப்பல்கட்டும் தளம் தேசீயமயமாகாதாம்!

முடிவை மாற்றிக்கொள்ள காரணம் தேடுகிறது!

இந்தியத் தொழில் மந்திரி ஷ்யாம் பிரசாத் முகர்ஜி, நான்கு நாட்களுக்கு முன்னர், வால்சந் ஹீராசந்தால் நடத்தப்பெற்றுவரும் விசாகப்பட்டணத்திலுள்ள கப்பல் கட்டும் தளத்தை, நிர்வாகம் ஒழுங்கீனமாக இருக்கிறதுஎன்பதைக்காரணமகாட்டி, இந்தியசர்க்கார் ஏற்றுக்கொள்ளப்போவதாக எக்காளமிட்டார். எந்தப் பணமூட்டைகளின் எதிர்ப்புஎழுந்ததோ தெரியவில்லை, இந்திய சர்க்கார், தனது முடிவை மாற்றிக்கொள்ள- இல்லை- தள்ளிப்போட தயாராகிறது. அதற்கான காரணங்களை கண்டுபிடிப்பதில் முனைந்திருக்கிறது.

எந்த எந்தத் தொழிலை எந்தவித வரிசைக் கிரமத்தில் தேசீயமாக்குவது என்னும் பிரச்னையில், இன்னும் இந்திய சர்க்கார் முடிவு காணாத நிலை, உணவு உற்பத்திக்கு முதலிடம் கொடுத்திருப்பதால், அதனை உடனடியாகக் கவனிக்கவேண்டிய பொறுப்பு முக்கியமாக இருப்பதாலும், கப்பல் கட்டும் தொழிலுக்குக் கடைசி இடந்தான் தருவதென முடிவு செய்திருக்கிறதாம்.

மூலதனச் செலவுகளை முடிந்தவரையில் சிக்கனம் செய்ய வேண்டியிருப்பதால், கப்பல் கட்டுவதில் செலவிடப்படுவதென்பது, தற்காலம் உள்ள பொருளாதார நெருக்கடியில், இந்திய சர்க்காரால் சாத்தியமாகக்கூடியதல்லவாம்.

மக்கள் தோல்வி மேல் தோல்வி அடைகின்றனர்; லால் சந்து ஹீராச சந்துகள் வெற்றி மேல் வெற்றி பெறுகின்றனர்! இந்தியசர்க்கார் ஏழைகள் பெயர் கூறி நடந்து வருகிறது!

நல்ல வருமானந்தான்!

டில்லி நகரசபையினர், டில்லிக்கு 30 மைல் தொலைவிற்கு அப்பாலிருந்து வருகிற பிரயாணிகளுக்கு, அவர்கள் தரை, ரயில், விமானம் இந்தச் சாதனங்கள் எதன்மூலமாக வந்தாலும், அவர்களுக்கு வரி விதிக்கவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார்கள்.

ரயில் மூலமாகப் பிரயாணம் செய்பவர்களாக இருந்தால், முதல் வகுப்புப் பிரயாணிக்கு 8 அணாவும், இரண்டாம் வகுப்புப் பிரயாணிக்கு நான்கு அணாவும், மூன்றாவது வகுப்புப் பிரயாணிக்கு இரண்டு அணாவும் விதிக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

இதனால் நல்ல வருமானம் கிடைக்கத்தான் செய்யும். அ. கி. சபை உறுப்பினர்களுடன் பேசுபவர்களுக்கு, மந்திரிகளைப் பேட்டி காண்போருக்கு, சர்க்கார் மாளிகையில் விருந்துண்போர்க்கு, பெர்மிட்சேட்போர்க்கு, லைசென்ஸ் விரும்புபவர்க்கு என்று பலதரப்பட்டவர்க்கும் வரி விதித்தால் அதன் மூலமும் நல்ல வருமானம் கிடைக்கும். அதை டில்லி, நகர சபை செய்ய முற்பட்டால் அதன் தேவை பூர்த்தியாகிவிடும்!

நல்ல வேலையே! ஆனால் ஒழுங்காக நடக்குமா?

சென்னைச் சட்டசபை அங்கத்தினர்களும், காங்கிரஸ்காரர்களும் இதுவரை வாங்கியுள்ள பர்மிட்டுகள், அவர்கள் நடந்து கொண்ட விதம், நடவடிக்கை முதலிய விவரங்களை அவர்களிடமிருந்தே அரசாங்கம் கோரியிருப்பதாக ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றனவா என்பதைக்காண இம்முயற்சி என்றால் இது வரவேற்கத்தக்கதே. ஆனால், உண்மையிலேயே, ஊழல்கள் ஏற்படாதபடி தடுப்பதும், ஊழல்கள் ஏற்பட்டிருந்தால் தண்டிப்பதும் ஊழல்களுக்குக் காரணகர்த்தாவாக இருப்பவர் எவராக இருந்தாலும் தயை தாட்சணியமில்லாமல் இருட்டடிப்புச் செய்யாமல் நேர்மையாக அம்பலப்படுத்தித் தண்டனைக்குள்ளாக்குவதும் அரசாங்கத்தாரின் உண்மையான நோக்கமாயிருந்தால், பர்மிட்கள் வாங்கியோர், அவர்களுடைய நடவடிக்கை முதலியவை பற்றி அவர்களிடமே கேட்காமல், இரகசியப் போலீசார் மூலம் இவ்விவரங்களை திரட்டியிருக்கலாமே!

அதுமட்டுமல்ல. சட்டசபை அங்கத்தினர்களோ அன்றி மற்ற உத்தியோகஸ்தர்களோ மந்திரிகளோ பதவிக்கு வருமுன் எத்தகைய செல்வநிலை பெற்றிருந்தனர். இப்போது எத்தகைய செல்வநிலை பெற்றிருக்கின்றனர் என்னும் விவரத்தையும் திரட்டலாமே. நேர்மையாளர்களுக்கு இத்தகைய விசாரணையால் சங்கடம் ஒன்றுமில்லை. நேர்மை தவறியவர்கள் எவரேனுமிருந்தால் அவர்களை அம்பலப்படுத்தி விசாரணைக்குக் கொண்டுவந்தால், நீதிக்குக் கட்டுப்பட்டு, அரசாங்கம் நடந்து கொண்டது என்ற பெருமை ஏற்படுமல்லவா? சென்னை அரசாங்கம் இத்துறையில் முயல முன்வருமா?

வளமார் திராவிடம் தான் — பயன் என்ன?

அதிகாரம எவரிடத்திலோ இருக்கிறதே

ஈரோடுதாலுக்கா, வள்ளிக்கண்ணு அருகில் உள்ள இரும்புத் துகைல் கிராமத்தில் இரும்பு கிடைப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதே சேர நாட்டில் மற்றொரு பகுதியில் தங்கம் இருக்கிறதென்பது கண்டு பிடிக்கப்பட்டதாகப் பல ஆண்டுகளுக்கு முன்னரச் செய்தி கிடைத்தது. கண்ணனூரிலும் தென் ஆர்க்காடு மாவட்டத்திலும் நிலக்கரி இருப்பதாகவும், சேலம் மாவட்டத்தில் இரும்புகிடைப்பதாகவும், செய்திகள் கிடைத்தன. ஆனால், இவை நம திராவிட நாட்டிலும் இன்றைய உலகம் ஜீவாதாரப் பொருள்களெனக் கருதும் இரும்பு, நிலக்கரி, தங்கம் முதலியவை கிடைக்கின்றன என்று பெருமையடித்துக் கொள்ளத்தான் பயன்பட்டனவே ஒழிய, இவற்றை அகழ்ந்து, பூமிக்குள்ளிருப்பவற்றை வெட்டி மேலே கொணர்ந்து நம் திராவிட நாட்டை உலகப் பெருநாடுகளுள் ஒன்றாக ஆக்கும்அதிகாரம்நம்கையில் இல்லை. அதிகாரபீடத்தை அலங்கரித்துக் கொண்டிருப்போர் உள்ளத்தில் இந்த அவா எழவில்லையே, எழுந்தாலும் இவ்வாறு செய்வது, திராவிடத்தைப் பெருநாடாக்கி விட, மத்திய அரசாங்கம் இடந்தர மனமிசைய வில்லையே. இந்த நிலைமாறி நம் நாட்டுக் கனிப்பொருள்களை வெளிப்படுத்தி, அவற்றின் பலனை நம் நாடே அடையுமாறு செய்யும் துணிவுடையார் ஆட்சிப்பீடத்திற்கு வரும் வரை "வளமார் திராவிட நாடு வாழ்க வாழ்கவே" என்று வாழ்த்தொலியைத்தான் கேட்டுக் கொண்டிருக்கவேண்டும்.

தீவோ, தீவு!

ஆச்சரியம், ஆனால் உண்மை! மூன்று, தீவுகள், விலைக்கு விற்கப்பட இருக்கின்றன!

28,000 பவுன், ஒரு தீவின் விலை. 15,000பவுன் விலையில் இன்னோர் தீவு இருக்கிறது.

7000 பவுன் விலைக்குக் கிடைக்கும் மற்றோர் தீவு!

எது வேண்டுமோ, பெற்றுக்கொள்ளலாம், என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தீவுகள், தென் கிழக்கு பிரிட்டனில், உள்ள பூல் துறைமுகத்தருகே உள்ளன.

28,000 பவுன் விலையுள்ள தீவின் பெயர், வட்டத்தீவு! இதன் பரப்பு 10 ஏகர்.

நீண்ட தீவு என்பது தான், 15,000 பவுன் விலையுள்ளது. இதன பரப்பு 20 ஏகர்.

7000 பவுன் விலையுள்ளது. 10 ஏகா பரப்புள்ள பச்சைத் தீவு!

★

தீவோ, தீவு! என்று கூவிக கூவி விற்றாலும், எங்களுக்கு என்ன, நாங்கள் விலை கொடுத்து வாங்கவா போகிறோம், என்று கேட்கிறீர்களா? நாம், வாங்க முடியாது-தேவையும இல்லை.

ஆனால், தன ஆட்சி ஆணவத்தால் அமளியை ஆபத்தான முறைக்குக் கொண்டு வந்து விட்ட சியாங்கே-ஷேக போன்றவர்கள் தம நாட்டு மக்களின் சீற்றத்திலிருந்து தப்பித்துக்கொள்ள, இப்படிப்பட்ட தீவுகளைவிலைக்கு வாங்கிக்கொண்டு, குடி ஏறிவிடலாம் பாருங்கள்!

ஒரு தீவை, சியாங்கே-ஷேக வாங்கிவிடட்டும்-பாவம-அவருக்குத்தேவை தான்-அதுவும் அவசரமாக!

மற்ற இரண்டு தீவுகளுக்கு, மட்டும் ஆள் கிடைககாமலா போகும்!

உடுப்பு முறைகண்டு பாதிரியார் உறுமல்

இங்கிலாந்தைச் சேர்ந்த பர்சிலோனியாவிலுள்ள மக்கள், உடுப்புகள் உடுத்தியிருப்பது கண்டு வெகுண்டெழுந்து சீற்றச் சொற்கள் வீசினாராம.

அவருடைய குற்றச் சாட்டு ஆண்களும், பெண்களும் ஆபாஸமான முறையில் ஆடைகளை உடுத்திக் கொண்டிருககிறார்கள் என்று, அவர் கருதுவதேயாகும். பெண்கள் தங்கள் மேற் பகுதியை முற்றும் மூடிக்கொள்ளாமல் திறந்து போட்டபடியே இருக்கிறார்கள் என்பதும். கால்களின் முழுப்பகுதி வெளியே தெரியும் படியாக ஆடையுடுத்துகிறார்கள் என்பதும், ஆண்கள் மிகவும் உயர்வுக் குறையான கால் சட்டைகளை அணிந்திருப்பதோடு தங்கள் சட்டையின் கைகளை மடக்கிக்கொண்டிருப்பதுஎன்பதும் அவருக்கு அடங்காக்கோபம் உண்டாகி விட்டது.

நாகரிகம் அப்படி வளர்ந்து விட்டபோது, பாதிரியார் கோபப்பட்டு என்ன செய்வது!

தெ. ஆ. வில் 'ஹிட்லர்' தோற்றமெடுக்கிறார்

நிறத்திமிர் மனித சமுதாயத்துக்கே அவமானம்

மனிதன் பகுத்தறிவு படைத்தவன்-சேர்ந்து வாழ்வு பண்புடையவன் என்று மனிதப் பிறவியின் மேம்பாடு பேசப்படுகிறது ஒரு பால்! மனிதனோடு மனிதனசேர்ந்து வாழக்கூடாது -அவன் கருநிறமுடையவன் என்று நிற துவேஷ மனப்பான்மை தலைவிரித்தாடுகிறது மற்றோர்பால்! எவ்வளவு மானக்கேடு மனித சமுதாயத்துக்கு!

இந்த நிறவெறித்திமிர் காணப்படுவது காட்டுமிராண்டிகளிடத்தேயல்ல. மிகுதியும் வெள்ளையர்களிடத்திலேயே தான். இன்னும் உண்மையைச் சொல்லவேண்டுமானால், கறுப்பு நிறத்தவர் வெள்ளை நிறத்தவரை அன்போடு வரவேற்று, அவரோடு பழகி அகமகிழ்வைப் பெறத்தான் பெரிதும் ஆசைப்படுகின்றனர். உலகின் எல்லா பாகங்களிலும். நாகரிகம் மிகுந்த -நாகரிகத்தில் மிகுந்ததாகக் கருதிக்கொள்கிற வெள்ளையர்கள்தான் நிறவெறித்திமிரில் தலைதுள்ளிப் போகிறார்கள்.

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா ஆகிய இடங்களில் வெள்ளையர் நிறத்திமிரின் காரணமாகச் செய்கின்ற அட்டகாசச் செயல்கள் சொல்லி முடியாதனவைகளாக இருக்கின்றன.

இப்பொழுது எல்லா நாடுகளையும் விட நிறத்திமிரில் தலை தூக்கிநிற்கும் பகுதி தென் ஆப்பிரிக்கா மலான் சர்க்கார் இந்தியர்களுக்கு இழைத்து வரும் கொடுமைகளை இங்கு வந்து கூறுவோர், கண்ணீரோடு சேர்த்துத்தான் சொற்களைச் சிந்த விடுகிறார்கள்.

"நிறத்திமிர் கொள்கை ஸ்மட்ஸ் சர்க்காரில் கடை பிடிக்கப்பட்டதைவிட, இன்னும் தீவிரமாக மலான் சர்க்காரினால் பின்பற்றப்படுகிறது. மத்திய ஐரோப்பாவில் யூதர்கள் முன்பு நடத்தப்பட்டதைவிட, மோசமாக தென்னாப்பிரிக்க இந்தியர்கள் இப்பொழுது நடத்தப்படுகிறார்கள்" என்று, தென்னாப்பிரிக்கா சென்று அங்குள்ள இந்தியர்களின் நிலைமைகளை நேரில் கண்டறிந்து, இந்து வந்துள்ள தோழியர், மாணிகா வாட்லி தம் அறிக்கையில் குறிப்பிடுகிறார். அவர் மேலும் சொல்லும்போது "ஸ்மட்ஸைக் காட்டிலும் மலான் முழுவதும் பாஸிஸ்ட் மனப்பான்மை கொண்டிருக்கிறார்" என்று விளக்குகிறார்.

இத்தகைய போக்கு அங்கு இருந்து வரவும், அதனைத் தடுக்க, உலகப் பாதுகாப்புக்காக ஏற்பட்ட ஐ. நா. சபையாலும் இயலவில்லை அல்லது முயலவில்லை யென்றால், அத்தகைய தொரு சபை இருந்தென்ன, போயென்ன என்று எண்ண வேண்டி வருகிறது.

தென்னாப்பிரிக்காவில் மற்றொரு ஹிட்லர் உருவாகிறார்! அந்தக் கேடுகளின் அறிகுறி முதலில் அழிக்கப்படவேண்டும்; அப்பொழுதுதான் உலகம் நல்லவர் பக்கம் நகர்கிறது என்ற பொருள் ஏற்படும்.

இன்னும் நீண்ட காட்களுக்கு நிறவெறித்திமிர் தாண்டவமாடிக் கொண்டிருப்பதைத்தான், ஐ. நா. சபை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கப்போகிறதா?

கழக வேலைக[ள்]

கழக அலுவலகக் கட்[டிடத்]தில் (7, பவழககாரத்[தெரு] மண்ணடி, சென்னை) 2-9-[49] நாள் இரவு கழக முக்கிய[ஸ்தர்]கள பலரும் தோழர் சி. [என்.] அண்ணாதுரை அவர்[களை] கண்டு எதிர்கால ஆகக [வேலை]களுககான திட்டஙகள் ப[ற்றி] பேசினா.

17-9-49ல் மத்திய [நிர்வா]கக்கமிட்டி உறுப்பின[ர்கள்] கூட்டம கூட்டுவதற்[கான] ஏற்பாடுகள் தொடஙகப்[பட்டி]ருக்கிறது.

பெரியாரின் [பே...] கண்டிதது, அவர் த[லைமை]யின்கீழ்ப் பணி புரிவதி[ல்லை] என்று கருத்துதெ[ரிவித்]துள்ள மத்திய நிர[்வாக] கமிட்டி உறுப்பினர்கள் [அனை]வர்க்கும, அழைப்பு அனுப்பப்பட்டிருககின்ற[ன].

பொறுப்பாள[ர்],
கழக அலுவலக[ம்].

ஆள் ஒன்றுக்குச் சராசரி 2222¼ ஏக்கர் நிலம்

ஜமீன்-இனும்கள் ஏகபோகம்

சென்னை மாகாணத்தில் ம[...] மொத்தம் 2800 ஜமீன்தாரி [...] இருக்கின்றன. இனும் எ[...] பெயரால் 3500 இருக்கின்[றன]. இவ்விரு கூட்டத்தாரும் — ஜ[மீன்க]ளும் இனும்களுமாகச் சே[ர்ந்து] இந்த நாட்டிலே, 140 லட்சம் [ஏக்கர்] நிலங்களைத் தம் வசப்படு[த்திக்] கொண்டிருக்கின்றனர். இ[...] சராசரியாக இவர்களிடைப் [பங்கு] கிட்டால், ஆள் ஒன்றுக்குச ச[ராசரி] 2222 ¼ ஏக்கர் நிலம் ஆகிறது. வளவு ஏராளமான நில[...] இவாகள் கைவசப்படுத்[திக்] கொண்டிருந்தும் இ[...] கூட்டத்தினராலும் [நாட்]டின் உணவு உற்பத்தி பெ[ருக்]கையில் நலல முறையில் வள[ர்ச்சி] டன், நாட்டு முன்னேற்றத்திற[்கான] வேலைகளும் நடை பெறவி[ல்லை]. இவற்றால் நம் நாடு சீர்கே[ட்]டை அளவு எடுத்துரைக்க இயல[ாது]. ஜமீன்களை அரசாங்கம் ஒ[ழிப்ப]தென்று முடிவு செய்து, வி[ஜய]நகரம், பொப்பிலி, பித்தாபுரம், [...] கடகிரி முதலி தெலுஙகு [ஸம்ஸ்]தானங்களையும், சிவகஙகை, இ[ராம]நாதபுரம் முதலிய தமிழ்ச்சம[ஸ்தா]னங்களையும் கலைத்துச சென்[னை] அரசாஙகத்துடன் சேர்த்து[விடுவ]தென்று முடிவு செய்திருக்[கிறது].

ஆனால், இனும்கள் விஷ[யம்] என்ன? ஜமீன்கள் ஒழிக்கப்ப[டுவது] போலவே, நாட்டில் உள்ள இ[னும்]களும் ஒழிக்கப்படவேண்டுவது [இன்றி]யமையாத வேலையாகும். [...] களின்வரட்டுவாதத்தையும், சனு[...] களின் சண்டித்தனப் பேச்சை[யும்] கண்டு இனியேனும் சென்னை [அர]சாங்கம் கலங்கிவிடாமல் துணி[ந்து] இனும்களையும் ஒழித்துத் தீர் [...] நற்பணியில் இறஙக முன்வ[ர வேண்டும்].